விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–11.40 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –11.50 a.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.No.180/2019**

**Prosecution side witness : அ.சா.3** **Date :** 17.03.2025

| | |
|---|---|
| **Name : செல்வசுரேஷ்பிரிட்டோ** | **Taluk : விளவல்கோடு** |
| **Father Name : செல்வராஜ்** | **Calling : உதவி ஆய்வாளர்** |
| **Village : தெற்குதிருவிளை** | **Age : 47** |

(Accused absent. Filed petition and allowed. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சத்தியமங்கலத்தில் சிறப்பு இலக்குபடை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.11.2012 ம் தேதி நான் மற்றும் சிறப்பு இலக்கு படையைச் சேர்ந்த காவலர்கள் 1286 ரவிசந்திரன், 673 பிரபு, 525 துரைராஜ் மற்றும் சிலர் காவலர்கள் உடன் வனத்துறையை சேர்ந்த வனவர் குப்புசாமி, மற்றும் வனக்காபாளர் திரு.நல்லசிவம், வனக்காவலர் ராதா ஆகியோருடன் சின்னகாவல் சந்து என்னுமிடத்தில் மறைந்து இருந்து தாக்குதல் பணி Ambush பணி மேற்கொண்ட போது இரவு சுமார் 20.00 மணியளவில் ஒரு நபர் கையில் எதோ பொருளுடன் வந்துக்கொண்டிருந்தார். பின்னர் அவரை குழுவினருடம் சுற்றி வளைத்து பிடித்து அவரை விசாரித்தபோது செட்டிப்பட்டியை சேர்ந்த சுந்தராஜ் என்ற வெள்ளையன்(40), த.பெ.அப்புசாமி என்பதும் அவர் நாய்களை வைத்து வேட்டையாடி சுமார் 3 கிலோ எடையுள்ள உடும்பு மற்றும் அரிவாள் ஒன்று, செல்போன் ஒன்று ஆகியவற்றினை கைப்பற்றி அடர்ந்த வனபகுதி

என்பதால் தனிநபர் சாட்சியம் எதும் இல்லாததால் வனதுறையினர் முன்னிலையில் மகஜர் தயார் செய்து இரவு சுமார் 22.00 மணியளவில் மேட்டுர் வனசரகர் அவர்களிடம் மேல் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து தனி அறிக்கை தயார் செய்தேன். **(நான் தயார் செய்த மகஜர் அ.த.சா.ஆ.4 மற்றும் என்னுடைய தனி அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – செய்யப்படவில்லை</u>

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**